


**27. 09. 2025**

## தலைப்பு செய்திகள்

1. உலகளாவிய தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் வளரும் நாடுகளின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. வேளாண் துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. உலக சுற்றுலாதினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது.

5. சீனாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் அனிரூத் சந்திரசேகர் இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர்

உலகளாவிய தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலம் ஜார்ஜ்சுகுடாவில் **BSNL** 4ஜி தொழில்நுட்ப கட்டமைப்பு சேவையை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டியெழுப்ப இத்தகைய உயர் தொழில்நுட்பங்கள் மிகுந்த பயனளிக்கும் என்றார்.

சுதேசி 4ஜி மற்றும் 5ஜி தொலைத்தொடர்பை கொண்ட 5 முன்னணி நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பிடிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டில் முழுமையான 4ஜி தொழில்நுட்பத்தை **BSNL** உருவாக்கியுள்ளதாக பெருமிதம் தெரிவித்த அவர், நிபுணர்களின் கடினஉழைப்பால் இது சாத்தியமானதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தொலைத்தொடர்பு, ரயில்வே, உயர்கல்வி, சுகாதாரம், திறன்மேம்பாடு, கிராமப்புற வீட்டுவசதி உள்ளிட்ட துறைகளில் 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு பிரதமர் இன்று அடிக்கல் நாட்டினார்.

சூரத் - பெர்ஹாம்பூர் மற்றும் உத்னா இடையேயான அம்ரித்பாரத் விரைவு ரயிலையும் பிரதமர் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖

.. மியூசிக் ..

**சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர்** திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், தேசபற்றை ஊக்குவிக்கும் வகையில் நாட்டின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், மறைந்த தலைவர்களையும் கவுரவிக்கும் எதிர்கால சந்ததியினருக்கு உத்வேகம் அளிக்கும் நடைமுறைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையின் கீழ் தேசிய சின்னங்கள் மற்றும் நினைவகங்கள் மூலம் நாட்டின் மறைந்த முன்னாள் தலைவர்களை நினைவுகூர்ந்து தேசத்தின் கலாச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வது குறித்து பிரதமர் புதிய நாடாளுமன்ற வளாக திறப்பு விழாவில் உரையாற்றுகையில்

.. பிரதமர் வாய்ஸ் ..

புதுதில்லி தேசிய போர் நினைவு சின்னம் நமது வீரர்களின் துணிச்சல் மற்றும் தியாகத்திற்கு சான்றாக திகழ்கிறது.

அறியப்படாத சுதந்திர போராட்ட தியாகிகள் குறித்து திருச்சியை சேர்ந்த துணை பேராசிரியர் டாக்டர் சாம்ராஜ் தெரிவிக்கையில்

.. பயனாளி வாய்ஸ் ..

அறியப்படாத விடுதலை போராட்ட தியாகிகளின் புகைப்படங்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதால் சுதந்திர போராட்ட வீரர்களை அறிந்துகொள்ள முடிவதாக கல்லூரி மாணவர் தெரிவிக்கையில்

**.. பயனாளி வாய்ஸ் ..**

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசின் ஆட்சியில் அருங்காட்சியங்கள் வரலாற்றை கொண்டு செல்லும் பாலங்களாகவும், சின்னங்களாகவும் அமைந்துள்ளன என்பது மிகையல்ல.

**.. மியூசிக் ..**

❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் வளரும் நாடுகளின் பங்களிப்பு** அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்த்திருத்தங்கள் குறித்து ஜி-4 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் நாடுகள் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற உறுப்பினர் பிரிவுகளில் பிரதிநிதித்துவம் படுத்தப்பட வேண்டுமென்றார்.

❖❖❖❖❖❖

**பஞ்சாயத்து ராஜ்**

**நாடுதழுவிய மக்கள் திட்ட சப்கி யோஜனா ! சப்கா விகாஸ்** பிரச்சாரத்தை மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் அடுத்தமாதம் 2-ம் தேதி தொடங்குகிறது.

அடுத்த நிதியாண்டிற்கான பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டங்களை தயாரிப்பதற்கான செயல்முறைகளும் இதில் தொடங்கப்படவுள்ளன.

கிராமப்புறங்களில் சிறந்த சேவை வழங்கல் வெளிப்படையான உள்ளூர் நிர்வாகத்தை வலுப்படுத்துவது உள்ளிட்டவைகளை நோக்கமாக கொண்டு இந்த பிரச்சாரம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**சரக்கு சேவை வரி**

**சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நாட்டின் மறைமுக வரி** கட்டமைப்பை எளிதாக்கியுள்ளது.

இந்த சீர்த்திருத்தங்களின் கீழ் சுற்றுலா மற்றும் பொதுபோக்குவரத்தை மலிவு விலையில் மாற்றுவதை நோக்கமாக கொண்டு குறிப்பிடத்தக்க வரி குறைப்புகளை அரசு அறிவித்துள்ளது. இந்த சீர்த்திருத்தங்களின் கீழ் மருத்துவ சுற்றுலா, சூழல் சுற்றுலா மேம்பட வகை செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து திருச்சி பேராசிரியர் திரு. எஸ்.சுப்ரமணியன் தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

**வேளாண் துறையில் தமிழகம் முன்னோடி** மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெறும் 2 நாள் வேளாண் வணிக திருவிழாவை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், நடப்பாண்டில் 5 லட்சத்து 66 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

47 ஆயிரம் தரிசு நிலங்கள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், மேட்டூர் அணை குறித்த நேரத்தில் திறக்கப்படுவதாக தெரிவித்தார்.

கடந்த 4 ஆண்டுகளில் 456 லட்சத்து 44 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை எட்டியுள்ளதாகவும், பயிர் உற்பத்தியில் நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக கூறினார்.

உழவர்களுக்கான பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக சென்னை தரமணியில் வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் **M.S.**சுவாமிநாதனின் நூற்றாண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖

நாசர்

**பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை கொண்டாடும்** வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற மிதிவண்டி போட்டியை மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம் மாவட்டங்களில் நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் வெற்றிபெற்ற பள்ளி மாணாக்கருக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிசுகளை வழங்கினர்.

இதேபோல் பெரம்பலூர், விழுப்புரம், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று மாரத்தான் போட்டிகளும் நடைபெற்றன.

❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ்**

**தமிழக அரசு கல்வித்துறை மேம்பாட்டிற்கான** பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ்பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டத்தில் 82 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட கிராம செயலக கட்டிடங்கள், அங்கன்வாடி கட்டடம், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றை இன்று திறந்து வைத்து பேசியஅவர், அரசுபள்ளி மாணாக்கரின் முன்னேற்றத்திற்கான பல்வேறு முன்முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**சுற்றுலாதினம்**

**உலக சுற்றுலாதினம் இன்று கொண்டாடப் படுகிறது.**

கலாச்சார பரிமாற்றம், பொருளாதார வளர்ச்சி, மக்களை இணைப்பது உள்ளிட்டவைகளில் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் ஆண்டுதோறும் இந்நாள் கொண்டாடப் படுகிறது.

சுற்றுலா மற்றும் நிலையான மாற்றம் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

இந்நாளையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖

## இருவரி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரதமரின் சூரியஒளி வீடு திட்டத்திற்கு இணையதளம் வாயிலாக அடுத்தமாதம் 15-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவ திரு.தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் நடைபெற்ற அகில இந்திய புலிகள் மதிப்பீட்டு பயிற்சி நிறைவடைந்ததையடுத்து 4 நாட்களுக்கு பிறகு இன்றுமுதல் வழக்கம்போல் செயல்படுகின்றன.

புரட்டாசி 2-வது சனிக்கிழமையை ஒட்டி தர்மபுரி உழவர் சந்தையில் 41 டன் காய்கறிகள் விற்பனையாகியுள்ளது.

❖❖❖❖❖❖

## டென்னிஸ்

சீன **Jing shan**-னில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர், அமெரிக்காவின் ரீஸ் ஸ்டால்டர் இணை – தாய்லாந்தின் சங்ஹுவாங், தென்கொரியாவின் யூசங்பார்க் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

## தடகள போட்டிகள்

12-வது உலக பாரா தடகள போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்கின.

அடுத்தமாதம் 5-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் 104 நாடுகளை சேர்ந்த வீர வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்தியாவின் சுமித் அன்டில், ப்ரீத்திபால், பிரவீன்குமார் உள்ளிட்ட 75 வீர வீராங்கனைகள் இதில் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖